விலை அணை 1. மறைந்த அர்ச்சுனன் பந்தலில்



மாநாடு நடந்தது.

முரசு 1 | திருவாரூர் பெரியார் ஆண்டு 69 19—5—48 புதன்கிழமை | ஒலி 16

கடைசி நாட்கள்

வாழ்க வாழ்கவே வளமார் படையின் முழக்கம் அருகாமை யில் நெருங்கிவிட்டது கண்ட வீரன்.....உறைகிழித்து வாளை யுருவி.....குதிரையிற் பாய்ந்து பறக்க நினைப்பானே.....அந்த நினைவைவிட மகா சக்திவாய்ந்த நினைவு திராவிட இளம் இதயங் களையெல்லாம் உலுக்கிய படி யிருந்தது. தூத்துக்குடி! ஆம். திராவிடத்தின் நகரங்கள் தோ றும் கிராமங்கள் தோறும்..... என்?.....பட்டி தொட்டிகளில் கூட அந்த ஒரு வார்த்தை அழகாக— ஆணித்தரமாக— ஆவேசமாக—ஆத்திர உணர்ச்சி ஊற்றெடுக்க—ஆவல் கரைபுரள —அன்பு ததும்ப—வெற்றிமு ரசின் நாதமாக—போர்வாளின் வீச்சாக—திராவிடனின் வீரக் குரலாக இப்படிப் பலபல ரகங் களில் பேசப்பட்டது. எழுதப் பட்டது. பாடப்பட்டது.

இன்னும் ஒருநாள் தாமத மென்றால் இருதயம் வெடித்து விடும் நிலைபெற்ற தோழர்களின் துயர் தீர்க்க தூத்துக்குடி துவங் கிற்று. திராவிட துன்பி முழங் கிற்று. கடற்கரைப் பட்டினத் திற்கு கருப்பு வர்ணம் பூசியது யார் என்ற கேள்வியைப் போட் டுக்கொண்டே அலை கடலின் விளிம்பில் ஆதவன் எட்டிப் பார்த்தான், எங்கும் கறுப் புடை!.....ஒரே கறுப்புடை!... லட்சியப் பாதையில் கால் வைத் தோர் லட்சத்துக்கு மேற்பட் டவர் சந்தித்தனர்.....கடல்கள் கைகுலுக்கிக் கொண்டதைப் போல! காட்டாற்று வெள்ளம் காவிரியில் கலந்து கங்கையில் மோதிடும் காட்சிபோல!

அத்தனைபேரும் திராவிடத் தின் மண்ணுக்குடையோர்!... திராவிடத்தின் மண்ணில் பிறந் தோர்!.....திராவிடத்தின் மண் ணோடு கலப்பவர்!.....

இந்த உரிமைப்போர் முரச மாயிருந்தது அவர்தம் உள்ளம்! வெட்டிவா என்றுரைத்தால் வெட் டிவரும் வீரர்கள்!...வில்வெட்டு மெத்தைகளும்...விதவித ஆட் டங்களும்...விஸ்கி, பீர்' ஒயின் பாட்டில்களும் வேண்டுமென நினையாதவர்கள்.....அவைகளை விரும்பிய வரை வெறுத்தவர்கள் அவர்கள் நடக்கும் சூறாவளிகள். பேசும்புயற்காற்றுகள். செயலாற் றும் பூகம்பங்கள். அந்த சூராதி

வேலாயுதம்

வீரச் சிரிப்பிலே—வெண்தாடி அசைவிலே!

சூரர்கள் சூழ்ந்தனர் கடற்கரையிலே!.....சூரியன் வான் நோக்கிச் செல்வதை தங்கள் இயக்கத்தின் வளர்ச்சி காட்டும் அறிகுறி என்று கவிஞர் குழு வர்ணித்தது.

கடலில் இளம்பிய பேரலைகள் கரையில்மோதிசெயலிழப்பதை, ஆரியத்தின் பால் ஆத்திரம் கொண்டு துடிக்கும் வாலிபர் கூட்டம், அண்ணல் பெரியாரின் பேருரைக்கு முன்னே அமைதி பெறுகிற காட்சிக்கு ஒப்பிட்டது ஒரு முதியோர் குழு.

கதிரவன் வரவால் கரையும் கருக்கலே பெரியார் வரவால் ஒழியும் கடவுளியத்திற்கு உவமையாக நிறுத்திற்று எழுத்தாளர் கும்பல்!.....

இத்தனை உயர் நினைவுகளும் உடைந்து சுக்கல் சுக்கலாக சிதறியது ஒரே ஒலியில்!.....

"பெரியார் வாழ்க!....."

அவர் வந்துவிட்டார். ஆமாம் அவர்தான் .....அன்றொருநாள் ஆண்ட மறத்தமிழன் சந்ததியை உய்விக்க வந்த உத்தமர்—'உழைத்தோம் உருக்குலைந்தோம் உலகறாதா! உணக்கடுக்குமா' என ஓலமிடும் பாட்டாளிகளின் வழிகாட்டி—மதமே இதம்!.....மனமே அடைவாய் பரமபதம் . என மடமை உபதேசம் புரிந்த பலிப்பாம்புகளின் மண்டையிலடித்து சாய்த்து, மக்களுக்குப் புதுப்பாதைவகுத்த புரட்சிவீரர்—கடவுள்களோ?...கடலில் வீசு!... சாஸ்திரமா...சவக்குழி வெட்டு! புராணமா போடு நெருப்பில்!....." யாரும் சொல்லாத... சொல்ல முடியாத.....சொல்ல அஞ்சிய இந்த சொற்களை.....சொன்னால் சுற்றிலும் எதிர்ப்புக்கள் சூழ்ந்துவரும் என்பது தெரிந்தும்—துணிவாகச் சொல்லிய அறிஞர் அறை-அந்த லட்சம் லட்சிய உள்ளங்களிலிருந்து எக காலத்தில் கிளம்பிய அந்த ஒரே ஒரு குரலைத் தன் பணிக்குப் பரிசாகப்பெற்ற பகுத்தறிவுச் சேயம்.....பெரியார் ராமசாமி. அவர் வந்துவிட்டார் அந்த உணர்ச்சிக் கடல் கொந்தளிப்பதைக்காண!.....

"எங்கள் கண்களைத் திறந்து விட்ட கர்மவீரா!...

இயேசுவுக்கு சிலுவை!.....முகம்மதுவுக்கு தாக்குதல்!.....சாக்ரடீசுக்கு நஞ்சு!.....லூதருக்கு நெருப்பு!.....காந்திக்கு குண்டு!.....தியோகிகள் தந்த பரிசு அத் தூய்மையாளருக்கு!.....இதோ இந்த வாலிப உள்ளங்களின் அழியாத பரிசாக.....தங்கட்கு அளிக்கிறோம்.....அதுதான் "பெரியார் வாழ்க!" என்று அந்த மக்கள் கடல் சொல்லிற்று.

புன்னகை பூத்த முகத்துடனே.....பொன் மேனியை அலங்கரிக்கும் கறுப்புடையுடனே.....பகுத்தறிவுப் பட்டாளத்தின் நடுவிலே வந்து நின்றார் அவர்.

"ஆகா!.....அவரைக் கட்டியணைத்து அப்படியே.....மெய் மறந்து ஆனந்தனம் செய்து கொண்டால்....." ஆர்வத்தின் உச்சியிலே தொங்கித் தவித்த கொழுந்து உள்ளங்கள் இப்படித் துடித்தன.

கடலிலே குமுறல்!.....கூட்டத்திலே கொந்தளிப்பு!...

அண்ணையில் 'ஆர்டிலரி'யின் குழாயில் புகை!.....அந்த எரிமலைகளின் நெஞ்சிலே புகைச்சல்!.....

"திராவிடநாடு திராவிடருக்கே!" என்ற கடற்கரையிலே தமிழ்நாடு தமிழருக்கே என்ற குழந்தையாகப் பிறந்து—தவழும் பருவத்திலேயே அன்னிய ஆச்சாரியார் ஆட்சியை அசைத்து—தத்தி நடந்து தன்னலங் கொண்டோர் தலையிலே கைவைத்து—திராவிட இன உணர்ச்சியை மழலையாகப் பேசி—வினையாட்டுப் பருவத்திலே சேலம்செப்து சீமான்களை வீழ்த்தி—திருச்சியிலே கருப்புடை அணிந்து—கதர் சட்டைகளின் வாயிலேயே பார்ப்பனீயம் ஒழிக என்ற பாட்டை வாவா வழைத்துக் காட்டி—நாடு பிரிவதுதான் நலமென, நாடு சுற்றினோர், நாவலர், பாவலர் அனைவரும் உணரச்சொல்லி, வளர்ந்து வளர்ந்து, வாலிபப்பருவமடைந்துள்ள வலிமை மிக்க முழக்கம்! .....வற்றாத சுனையுள்ள முழக்கம்,—

திராவிட நாடு திராவிடருக்கே!.....இந்த முழக்கத்தோடு அந்த மனிதக்கடல் முகர்ந்தது. வீரச்சிரிப்பு வழிய.....வெற்றியொளி விழிகளில் தாண்டவமாட...பெரியாரின் வெண்தாடி அசைவிலே பிற்போக்கு சக்திகளனைத்தும் அசைவதாக எண்ணிய அந்த தீரர்கள் நடை போட்டார்கள்,

ஊர்வலமா அது! ..இல்லை... இல்லை ..இட்லரை ஒழிக்க..... இரத்தந்தோய்ந்த களங்களில் உணர்ச்சி மூச்சோடு ஓடோடி வந்த மாண்போ வீரர்களை நினைவூட்டிற்று.....அந்த மாவீரர் பவனி!

மதம்!...கடவுள்கள்!...மாக்களாட்சி!.....இவை மண்ணோடு மண்ணாக...பொடிப் பொடியாக ...சாம்பல் துண்டுகளாக...மக்கி மடிந்துவிட வேண்டுமென்ற 'சாபம்' மனப்புயலாக மாறி—அவர்கள் இதயத்தைக் கிழித்

புலிக் குட்டிகளின் புரட்சி முழக்கம்!

தாக்கொண்டு எழுந்தது. "இழிவு ஒழிக" என்ற ஒலி!.....புரட்சி ஓங்குக என்ற எக்காளம்.... அப்பப்பா!.....இனிப் பார்க்க முடியுமா அந்த பட்டாளத் தம்பிகளின் பாங்கான நடையை!... இனி கேட்கத்தான் முடியுமா அந்தப் புலிக்குட்டிகளின் புரட்சி முழக்கத்தை!...பெரும் பேறுபெற்றது தூத்துக்குடி!... பெறற்கரியபேறு!.....பெரியார் சேனையின் அணிவகுப்பைக் காணும்பேறு!.....

குடந்தை தோழர் நீலமேகம் கொடியேற்ற—திருச்சி தோழர் வேதாசலம் திறப்புரை ஏற்க திராவிடத்தின் தலைவர்..... "சாகும்வரையில் நீரே தலைவர்" என்ற உறுதிமொழியும்..... அதற்கு ஆதரவும் மாநாட்டுக் கொட்டகையில் எதிரொலிக்க...தலைமையேற்றார். காட்டுக்குத் தக்கது சொன்னார். சிறைக்கோட்டம் திறந்தேயிருக்கட்டும் என எச்சரிக்கை பேசினார். வெள்ளம்போல் திராவிடர் கூட்டம் கண்டேன்.....வெற்றி மலர்கிறது.....அது மணம்வீச இன்னும் கழகம் வளரவேண்டுமென கருத்துரை பகன்றார். பிரச்சாரமே வேலைத்திட்டம். அது திராவிடத்தின் திக்கெட்டெட்டும் செய்யப்பட வேண்டுமென ஆணையிட்டார். ஆம் ஆம்! என்றது மாநாடு!.....நம்மைக் குறுகிய மதிபடைத்தோர் எனக் குறைகூறும் குள்ளநரிகள் உணரட்டும் எனக் கூறுவது போல்.....சாகும்போது நம் மவராய் செத்தார் காந்தி!..... அவர் நினைவில் வருத்துகிறோம்" என விளக்கி காந்தியார் படத்தைத் திறந்தார்.

பன்னீர் செல்வத்தின் சாவு கண்டு பரிதாபப்படாத கூட்டத்தினருக்கு—தாலமுத்து, நடராசன் அநியாய மரணங்கண்டு அனுதாபங்கூற மறந்தகூட்டத்தினருக்கு—கலியில் அடித்து தம்பீ! பாரப்பா எங்கள் தாராள குணத்தை என்று புத்தி கற்பிப்பதுபோல்.....காந்தியார் உருவத்தை மூடியிருந்த திரையை பெரியாரின் கைகள் விலக்கின.

என்னென்ன செய்ய வேண்டும்.....எது எதை மனத்தில் மாணிக்கமாகப் பதித்துக் கொள்ளவேண்டும்.....இழிவெனப் படுபவைகளை எப்படி. யெப்படி எடுத்தெறிய வேண்டும் என்ற வைரக் கருத்துக்கள் தீர் மானங்களாக ஒளிவிட்டன. திராவிட சமுத்திரம் அலைகளை ஆமோதித்து அலையோசை எழுப்பிற்று.

அங்கே ஒரு குறை!..... 'அண்ணு' வாயில்லை. அந்தக் குறை பல கூல்களில்! ஆச்சரியக் குறியாக இருந்து.....கேள்விக்குறியாக மாறி...'அண்ணு'வுக்து முற்றுப்புள்ளி வைக்கிற வரையிலே அந்தக் குறை வளர்ந்தது. முடிவுற்றது. பிறகும் வளர்ந்து கொண்டே போனது.

புகைவண்டித் தகராறு காரணம் என்று பொய் சொல்ல யாரும் விரும்ப முடியாத நிகழ்ச்சி! முக்கிய நிகழ்ச்சி!... ஆகஸ்டு 15ஐ கொண்டாட சுதந்திர வீர்களுக்கு ஒரே ஒரு நாள் இருந்தது போல்.....தூத்துக்குடியை இப்படிக்காண ஒரே ஒரு நாள்தான் அண்ணாவுக்கு அமைய முடியும். அதைத் தவற விட்டுவிட்டார். அதிர்ச்சியேற்பட்டது நமக்கு!.....அந்த லட்சம் பேரும் ஒரு பெரு மூச்சு விட்டனர்.

அந்த மூச்சிலே—

"நானே....ஆரியம் கேலி செய்யுமே! அய்யாவுக்கும் அண்ணாவுக்கும் தகராறுமே.....என்று அக்ராசாரம் பேசுமே!.....'!

"கழகம் வளரும்போது இப்படியெல்லாம் கேடு முளைக்கிறதே"

"தலைவருக்குப் பக்கத்தில் தளபதி இல்லையே"

"தளபதியின் வேலையையும் தள்ளாத வயதில் தலைவர் எப்படிக் கவனிப்பார்?"

"பெரியாரே! தங்கள் மனம் எப்படிப் புண்பட்டிருக்குமோ?"

"நேற்று வரையில் திராவிட நாடு இதழிலே தித்திக்கும் தீந்தமிழில் தூத்துக்குடி பற்றி தலையங்கம் தீட்டியவர் இன்று ஏனோ வாயில்லை?"

"சேலத்தில் சிங்கக்குரல் தந்த அண்ணு..... தூத்துக்குடியில் இல்லையே!"

"திருச்சியிலே முழக்கமிட்ட காஞ்சி வீரன்—திராவிடத்தின் தளபதி, இந்த டமாடாதகாரணம் யாதோ அறியோமே"

"வெற்றிலே குதப்பும் வாயுடனே.....வீணையை மீட்டுவது போல் இசைத்தமிழ் பேசி..... அருவியென கருத்துக்களை அள்ளி வழங்கி..... அணையுடைத்த ஆறென அறிவு வெள்ளம் பாய்ச்சிடும்.....அந்தக் குறுஞ்சிரிப்புக் குள்ள உருவம்—குள்ளநரிக் குணம் படைத்தோரின் கூற்றம், மாவீரர் கூடிய மாநாட்டில் காணப்படவில்லையே" என்ற இத்தனை சோகத் தொகுப்புகளும்—வேதனைவிணைக்களும் கலந்திருந்தன.

பெரியார் உரிமையோடு சொன்னார்.....தனயன் மேல்

'அண்ணை' பாதை அவர்கள் பாதையல்ல!

கோபித்துக்கொண்ட தந்தை (அன்பு மாறுமல்) சீறுவது மாதிரி....."வராவிட்டால் ஏன் கவலை? என்று. அதில் கனல் தெறித்தாலுங் கூட, கனிவு, பாசம் இரண்டும் கத்தரிக்கப்பட வில்லை என்பதை பெரியாரே மறுக்கமுடியாது.

பெரியார்—அண்ணை! இரு வரிடையே வெடிப்பு! ..வெடிப்பு கூட அல்ல வெறுங்கீறல். அதுவும் தங்கப் பாளத்தில் வற்பட்ட கீறல். உருக்கி ஒன்றுக்கிக் கொள்ளலாம்.

"என்னப்பா..... ... அண்ணை! உன் போக்கே எனக்குப் புரியவில்லை. விளங்கச்சொல். விலகி நிற்காதே."

இப்படிக் கூப்பிட்டுக் கேட்க பெரியாருக்கு உரிமையுண்டு; எனெனில அண்ணை அயல் கட்சியில் அடி எடுத்து வைக்க வில்லை.....அதனல்!

"அய்யா, நமதகத்தில் இவ்வளவு களங்கம் உள்ளது, அவை நீக்கப்பட வேண்டும். இதுவே என் குறை"

இப்படி அண்ணைவாவது வாய் விட்டுப் பேசிவிட வேண்டும். பிறகு கீறலில்லை ...வெடிப்பில்லை .....என் பிளவுமில்லை. அந்த 'பேட்டி' கடைபெறுமல் பெரியார், அண்ணை இருவரையும் சேர்த்துப் படம் போடுவதிலும், கோர்த்து எழுதுவதிலும பயனில்லை என்பதை தூத்துக்குடி நமக்குப் பாடமாகத் தந்து விட்டது.

ஆகஸ்டு 15 அக்கரை என்றார் தலைவர். இலை இன்பக்கரை என்றார் தளபதி. கழகத்துப் பாதையிலே இரண்டு கைகாட்டிகள். சரி...அண்ணைவை இனி அடுத்த கடனையில் தான் பார்ப்போம் என எண்ணிற்று நம் உள்ளம்.

இடையே கறுப்புடைக்கு, தடை வந்து தாண்டவம் புரிந்தது. சிங்காரச் சென்னையிலே சிறைபுகவும் தயார் எனக் கூறினர் தளபதி. ஆம்.....தலை வரும் தளபதியும் கமிட்டியிலே— கடற்கரையிலே—ஒரே மேடையிலே கர்ச்சனை செய்தனர் எனக்கேட்டோம். போர் முரசை வேகமாகத் தட்டினோம். திராவிடமெங்கும் அக்கரை மகிழ்ச்சி நாளாக—புது நாளாக ஆயிற்று. பொங்கிய உணர்ச்சியில் "ஆகஸ்ட் 15" அப்படியே மறந்துபோயிற்று. தூத்துக்குடியில் வந்து விடுவார் என எதிர் பார்த்தோம். வழியில் விழி வைத்துக் கிடந்தோம். எதிரி கூட்டு இடங்கொடுக்கக்கூடாது என்றுதான் சென்னை வந்தார்... கறுப்புடை தரித்து வந்தார். களத்திற்கு அஞ்சேன் என்றார். இப்போது வாவில்லை. ஒதுங்கி நிற்பதென்ற அவர் கருத்தும் மாறவில்லை.....என்பதை தூத்துக்குடி தெளிவாக்கிவிட்டது.

அண்ணை வந்திருக்கலாம். குற்றம் எங்கே யிருந்தாலும், குறைகள் எங்கே குடிகொண்டிருந்தாலும் அவர் வந்திருக்கலாம். பெரியாருக்காக அல்ல. நாட்டுக்காக! மக்களின் கல்லுணர்ச்சியில் கஞ்சு தடவப்படாமல் தடுப்பதற்காக!

கழகம்செல்லவேண்டியபாதை இது வெனக் கூறியிருக்கலாம். வேண்டியிருக்கலாம். எச்சரித்து இருக்கலாம். வருவதால்—வந்து அப்படிப் பேசுவதால் விளைவு விபரீதமாகிவிடும் என எண்ணியிருப்பாரேயானல், வராதிருந்தும் அந்த விளைவைத்தான் கண்டார் என்பதை மறுக்க முடியாது.

நமக்கு கம்பிக்கை இருக்கிறது—உறுதி இருக்கிறது... அண்ணைபோகும் பாதை, 'ஜீவா' பாதை அல்ல—வல்லத்தரசு வழி அல்ல—விசுவநாதம் சாலையல்ல என்று!

அவரைக் கதராடையிலோ, செஞ்சட்டையிலோ, கலப்பைக் கொடியினடியிலோ காண நினைப்பது வெறுங்கனவுதான் என்பது நமக்குத் தெரிவது மட்டுமல்ல .. திராவிடத் தோழர்கள் நம்ப வேண்டிய ஒரு உறுதிச்செய்தியுமாகும். அண்ணை, எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடார். திராவிடர் மேன்மையை இகழ்ந்தவனை தாய் தடுத்தாலும்விடார். திராவிடத்தைக் காக்கபோரிடுவார். அவர் கையிருப்பது நம் ஆயுதம். ஆனல், நம்பாசறையிலில்லை. அவர் சற்று தூரத்தில் இருந்து கொண்டு சமர் நடத்துகிறார். பிரிந்து நின்றால் படைவரிசை குலையும் பாசறைக்கு வருக அண்ணை!..." என அழைக்கின்றோம் நாம்.

நமது எதிரிதான் அவர் எதிரியும்!...என்...எதிரிகளில் சிலரை நமக்குக்காட்டி.....அவர்களை அசைபோடல் கட்டிப்போட்ட பெருமைகூட அவருக்குண்டு. பெரியாரின் புரட்சி கீதத்திற்கு புதுமெட்டு அமைத்து பல்லவிக் கழகங்களை பகுத்தறிவு நிலையங்களாக ஆக்கித் தந்தவர். தலைவர் தோண்டிக் கொடுத்த பொன் கட்டிகளுக்குப் புது மெருகு கொடுத்து...புலவர் கூட்டத்தை இயக்க வீரர்களாக்கியவர். 'கம்ப ராமாயணத்தில் கலை வந்து சொட்டு தண்ணே' என்று பாடிக்கிடந்த ரசிகமணிகளின் வாய்களுக்குப் பூட்டு மாட்டியவர். சபைகளை பதாப்பிகளை... 'சார்'களைசாய்க்கும் சேலத்து தீர் மானத்தைசாக்காத மாக்கியவர்.

நடிகவேள், மாநாட்டில் நஞ்சு கலந்தார்!

மூத்தமிழில் ஒரு தமிழாம் நாடகத் தமிழ் பயின்றுரை நாட்டுமக்கள் "கூத்தாடி" எனக் கூசாது பேசிய காலத்தில் முகத்தில் "பவுடர்" பூசி முடைநாற்ற மெடுத்த மூடக்கொள்கைகளை வெட்டி சாய்த்தவர்.

C. N. அண்ணாதுரை M. A. அலை-சாதாரண அண்ணாதுரை எனத் தன்னை கருதுபவர். "சனம்"களின் எகத்துளுக்குகளை அலட்சியப்படுத்தி சுயமரியாதைச் சோலையில்கருத்தை உலவ விட்டவர்...மீண்டும் பாசறைக்கு வருவார். பெரியாருடன் கலப்பார். பெரும்படையை அணிவகுப்பார். பணிபுரிவார் என்று நெஞ்சார நம்புகிற நேரத்தில்... அவர் வாதாது குறித்து (அன்பின் காரணமாக—அவர் சேவையை மறக்கக்கூடாது என்பதற்காக) பெரியார் அவர்களே பேசுவதற்கு இஷ்டப்படாத வார்த்தைகளை சர்வாதிகாரி நாடகத்திலே தோழர் ராதா பேசியது வருந்தத்தக்கது மட்டுமல்ல, ...பேசத்தகாத வார்த்தைகளை பேசக்கூடாத இடத்திலே உபயோகித்தது திராவிடர் கழகத்தின் மதிப்பையே குறைத்துக் காட்டியது. எதிரிகளுக்கு இடங்கொடுத்து, கையாண்டி செய்ய விட்டிட்டது. இரண்டு நாள் மாநாட்டின் இணையற்ற பயன்களை, பெரியார், அளந்து அளந்து பேசிய அருமை மிகு பேருரையை—நாடகத்தில் பேசிய ராதாவின் "ஸ்பெஷல் பேச்சு" கெடுத்துவிட்டது. அண்ணாவை மட்டுமல்ல.....கழகத்திலே உள்ள பிரமுகஸ்தர், பேச்சாளர், தொண்டர், பத்திரிகை ஆசிரியர் இத்தனை பேரையும் உரிமையோடு திட்டுவதற்கு பெரியார் அவர்களுக்கு மட்டுமே உரிமையுண்டு. தனிக் கருத்துக்களைப் பேசுவோர்.....ஒரு மாபெருங்கழகத்துப் பிரச்சினையில் இப்படித்தாறுமாறுகத் தலையிடுவது தகுதியல்ல!...அது தவறு! தவறு! தவறு! மாநாடு முதல் வகுப்பு வண்டியல்ல! மாநாட்டில் கட்சியைப்பற்றிப் புதிதாகப் புரிந்து கொள்ளவேண்டிய நிலையிலிருந்த ஆயிரக்கணக்கான தாய் மார்களுக்கு இந்த வார்த்தைகள் விசித்திரமாக—விளங்காத புதிராக—விபரீத நிலைக்கு அவர்களைக் கொண்டு வரத்தக்கதாக அமையுமே தவிர அவர்களுக்குக் கட்சியினிடத்தில் பற்று ஏற்படுத்த உதவாது.

"நான் சொல்லுகிறேன். தளபதியை இனி எந்தக் கூட்டத்திற்கும், நாடகத் தலைமைகளுக்கும் விழாவுக்கும் அழைக்காதீர்கள்"

இது ராதா அவர்களின் தீர்மானம். அறிவுரை. ஆணை.....நாடகத்தில்! எல்லைகடந்து எதுவும் பேசக்கூடாது என்ற தலைவர் கட்டளைக்கும், கழகசம்மந்தமான முக்கிய பிரச்சினையில் நடிகவேள் நடந்துகொண்ட முறைமைக்கும் எவ்வளவு முரண்!

திராவிடர் கழகத்திற்கு மின்னல் நடிகர் ராதா அவர்களின் நடிப்புத்தொண்டு எவ்வளவு தேவையோ.....அவருடைய புரட்சி நாடகங்கள எவ்வளவு தேவையோ.....அதைவிட "அண்ணா" தரும் அறிவுக் கருவூலங்கள் இன்னும் அதிகமாகத் தேவை. அந்தத் தேவையைத் தேள்கடி என்று கூறுவதா?.....தேனை நஞ்சென்பதா?...தென்றலை சூறைக்காற்றென்பதா?.....தித்திக்கும் தீந்தமிழை வெறுக்க உபதேசிப்பதா?.....அதுவும் தலைவர் பெரியார் (பேச முடிந்தும்) பேசாத வார்த்தைகளை...அண்ணாவையே ஒழித்துக்கட்டும் வகையில் வாரியிறைப்பதா?.....

அண்ணாவிடத்திலே குற்றங்களிருக்கலாம்.....எழுதிய கடிதங்களுக்கு பதில் எழுதுவதில்லை என்பதிலிருந்து குற்றம் காய்த்து, ஒத்திக்கொண்ட கூட்டங்கட்கு வருவதில்லை எனக் கனிந்து,...பிறகு அவை கொத்துக் கொத்தாக, குலை குலையாக ஆகி, தூத்துக்குடிக்கு வாவில்லை என்பது வரையிலே வந்து நிற்கலாம். அய்யாவோடு-அழகிரி-குருசாமி இன்னும் மற்ற தளபதிகளோடு—இலட்சக் கணக்கான இளம் இதயங்களுக்கு நடுவே அண்ணாவையும் மீண்டும் பார்க்கவேண்டுமென ஆசைப்படுகிறோம் "அய்யா-அண்ணா" 'பேட்டி' நடத்தி அமைதிகண்டு ஆனந்தப் பள்ளுப்பாடவேண்டுமென அவாகொண்டுள்ளோம் அவருக்கும், கழகத்திற்கும் இடையிலே ஆழமாகவும், அகலமாகவும் 'அகழ்' அமைப்பது ஆகாது. இது அன்பர் ராதா அவர்கட்கு மட்டுமல்ல.....அவரது வாடை அடிப்பவர்களுக்கும் கூடத்தான் கூறுகிறோம்; ஏனெனில், அண்ணா நம் கழகத்திலிருந்து வழுக்கிமாற்றாரின் கையாளாக ஆகாதிருப்பதால்!

கட்சியைப் பயன்படுத்திக் கொண்டு—தன் கலையைக்காட்டி கழகத் தோழர்களை மயக்கி—பிழைப்புக்கு வழிதேடிக் கொள்ள முயல்பவரல்ல அவர். —ஏமாற்று வித்தைக்காரருமல்ல!.....நாணயமற்றவருமல்ல.....!

அவர் வாதாது ஆத்திரமூட்டக்கூடிய செய்திதான். ஆனால், அந்த ஆத்திரம் உரிமையோடு பின்னிக்கிடக்க வேண்டுமே தவிர "ஒழிந்தது பீடை" என்ற எக்களிப்பை ஏற்படுத்துவதன்றி மறந்த செய்கையாகும்.

கோபத்தில் வார்த்தைகளைக் கொட்டுவது, மல்லாந்து படுத்தி

ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான்!

நுப்பவன் வானத்தைப்பார்த்து சாரித்துப்புகிற கதையாகத்தான் முடியும்.

இதை மட்டும் எதிர்க்கட்சித் தோழர்களிடம் நாம் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. ஜவகர்—காந்தி! இருவரிடையே எவ்வளவோ அபிப்பிராய பேதம்! தேசிய வட்டாரத்தில் அவர் கனைப்பற்றி தேவாமிர்தப் பிரசாரம்!

பட்டேல்—நேரு; எத்தனையோ கோணல்!.....காங்கிரஸ் தோழர்கள் வாயில் வந்த படியா வம்பு பேசினார்கள்?

அண்ணாதுரை கூடவிட்டுக் கூடு பாய்ந்துவிட்டால் அப்பொழுது 'திராவிட நாடு' பைலுடன் புறப்படுவோம்; அவருக்கு எதிர்ப்பு முன்னணி அமைக்க! அது வரை அவர் நம்பவர். ஒரு சிறிது இன உணர்ச்சி எங்கேயாவது கண்டால்கூட ஓமாந்தூரைப்பாராட்டுகிற நாம், நமக்காக இந்திப்போரில் சிறைப்பட்ட ஒரு தியாகத்தழும்பு கொண்டவீரனை தூற்றுவது, திராவிடர் வழக்கத்திற்கே மாறானதாயிற்றே! இதை மறந்துவிடலாமா?

பெரியார் ராமசாமி அவர்கள் உடல்தளர்ந்தும் உள்ளம் தளராது—ஊர் ஊராகச் சுற்றி உழைத்து உழைத்து உன்மத்தம் பிடித்தோரை உய்வித்து... இன முழுக்கம் செய்யும் இவ்வேளையில் "அண்ணா" ஒதுங்கிக்கிறேன் என்ற வார்த்தையை வெளியிட்டதே மகா பயங்கரமான—பரிதாப உணர்ச்சி தலைகாட்டாத—ஒரு சோகச் செய்திதான். வறுமைசேர் திராவிடத்தை வளமை கொஞ்சும் சோலையாக்க பெரியார் ஒருவரால்தான்—அதையும் அவரது காலத்தில்தான் முடியும் என்பதை அறிந்த "அண்ணா" அருகில் வரமாட்டேன் என அறிவிப்பது "நாட்டின்போதாத காலம்" என்றுதான் கூறவேண்டும். தளபதியின் பேச்சும் எழுத்தும் பேரிகையின் நாதமாக அமைந்து, பெரியாரின் பவனி திராவிடத்தின் திக்கெட்டும் நடைபெற்றால் லட்சிய முகட்டில் நம்மையறியாமலேயே நாம் தூக்கி வெறியப்படுவோம். ஆனால், அது நடைபெறவில்லை, நடைபெற்றதும் நடுவில் அறந்துவிட்டது. மீண்டும் நடைபெறச்செய்ய நாம் முயலவேண்டும். அதற்கு முணுமுணுப்பும், மூட்டுவாதமும் மருந்தல்ல. அவை வேற்றுமை யுணர்வுக்கு விருந்தாகும். இதையும் தூத்துக்குடி நமக்கு சொல்லாமற் சொல்லிற்று என்பதை மனதிற் பதிக்கத்தான் வேண்டும்.

இங்கே.....நமது தலைவர் பெரியார்!.....அங்கே.....நமது தளபதி அண்ணா!.....இடையிலே நாம், அசட்டு வெட்டாக் கூடாது பாலம் போடவேண்டும். ஆகஸ்ட் 15-ல் தலைவரின் அறிக்கையை மீறியபோதே ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தவறியதாழ்ச்சி, இன்று தூத்துக்குடிக்கு வரவில்லை என்பதற்காக...அவர் தொடர்பைக் கத்தரித்துக்கொள்ளத் துணியாது. ஆம்...அவர்மேல் உள்ள அன்பின் காரணமாக! அவரது தொண்டுக்கு மதிப்பளிக்கும் மனப்பண்பு காரணமாக!

* * *

பகைவர் பாசறையில் பரமானந்தம் பெருக்கெடுத்திருக்கும்.....ஆரிய வட்டாரத்தில் அகமகிழ்ச்சி அலைமோதியிருக்கும்.....தர்ப்பையை வீசியெறிந்து வாளேந்தும் உரம்பெற்ற தமிழ்க் குலத்தினர் தாங்கொணா இன்பமென வெறியாட்டம் நடத்தியிருப்பர். தலைவர்—தளபதியின் இடுக்கித் தாக்குதல் இனியில்லையென இறுமாந்திருப்பர் இளித்தவாயர். 'அப்பாடா' என கோட்டாவி விட்டிருக்கும் அரசியல் மடம்.

அவர்களறியார்; தூத்துக்குடியில் வந்து குவிந்தோர் தொடைநடுங்கிகள் அல்ல என்பதை!

பீடு நடையும், பெருமித தோக்கும், நிமிர்ந்த நெஞ்சும், நெருப்புக் கண்களும் கொண்ட அந்த லட்சியவாதிகளின் அலட்சிய சிரிப்பொன்றே ஆரியத்திற்கு வேட்டு என்பதை—தோழர் ராதாவின் குதிரை கிளப்பிய குளம்படி சப்தங்கள் ஆரியம், வடநாட்டு சூரண்டலீயம் இரண்டுக்கும் கோடையிடிகள் என்பதை—அன்புத் திருநாட்டின் 'உணர்ச்சி உற்சவத்தை' க்காண—உழைக்க உறுதி எடுத்துக் கொள்ள—அழகில், கற்பில், செயலில் உயர்ந்த பெண்களின் சைன்யம் அணிவகுத்து எழுப்பிய ஆவேசத்தொனி, பிற்போக்கு கும்பலின் அடிபீடம் ஆட்டுகின்ற பிரளயம் என்பதை—அவர்கள் உணர்ந்துதான் தீரவேண்டும்.

"ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான்; ஆனது ஆகட்டுமே" என்ற வீரப்பாடலே மரணசாசனமாக்கிவிடும் மானவர் எழுச்சியை, இன்று மகிழும் மதோன்மத்தர்கள் மறந்துவிடவே கூடாது.

தினவெடுக்கும் தோள்கள்—மூறுக்கேறிய நரம்புகள்—துடிக்கும் மீசைகள்—உலக்களத்தில் உறங்கிக்கிடக்க இனி முடியாதய்யா என்ற உணர்ச்சி உருவங்கள்—இளைஞரே யெல்லாம் திரை

பித்தம் தெளிந்திடுவீர்; ரத்தம் கொதிப்பேறு முன்பே!

போட்டு முடிவிட்டு இனியும் தென்றலில் நீந்த நினைக்கக் கூடாது, எதிரிகள்! தூத்துக்குடி கண்டோம்ர! அல்லது தூத்துக்குடி பற்றி கேள்வியுற்றோம்ே!.....'அண்ணு' வாமை கேட்டு ஆனந்தவாரிதியில் மிதந்தோமே! ஓதுங்கியிருக்தும் 'அண்ணு' கட்சியைவிட்டே விலகிவிட்டாலும், அண்ணுமட்டுமல்ல, தலைவர் பெரியார் ராமசாமியே கட்சியைத் தலைமுழுகிவிட்டுச் சென்றாலும்.....அவர்கள் வளர்த்து வைத்த.....இன உணர்ச்சி இனி மங்கிவிடாது. அந்த உணர்ச்சி 'இறவா வரம்' பெற்றது. ஓமாந்தூரார் உள்ளத்திலே—'தினசரி'யார் பேனாவிலே—தமிழ் மணியின் ஒலியினிலே கலந்து விட்டது, அந்த உணர்ச்சி!.....குலையாத சுருதியாக!, கலையாத சுதந்திரமாக!

அன்றொருநாள்....1925-ல்... காஞ்சிபுரம் சாகும் குழந்தை என்றனர். காஞ்சிபுரம் தூத்துக்குடியாக "விசுவரூபம்" எடுத்து நின்றதை அவர்களே கண்டனர்.

வசதிக்குறைவு—வேளை தவறிய சாப்பாடு—வரவேற்புக் கழகத்தினர் வாட்டத்தைப் பாராது செயலாற்றியுங்கூட, போகாதிருந்த புகைவண்டியால் தொல்லை—சிசுக்களுடன் தாய்மார்—இந்த இன்னல்கள், அந்த இலட்சம் லட்சியவான்களை தீண்டக் கூட முடியவில்லையே...ஏன்?... இந்தக் கேள்விக்கு ஒரே பதில் இன உணர்ச்சிப் பிரவாகம் என்பதுதான்!.....இன்னும் சுருக்கமாகச் சொன்னால் 'தூத்துக்குடி' என்பதே சரியான—சந்தோஷத்தைத் தட்டியெழுப்பும் படியான—பதிலாகும்!

காஞ்சிபுரத்தை கண்ட பெரியார், தூத்துக்குடியைக் காண முடியும் என கும்பினர்; லெனின் சோவியத் ரஷ்யா உதயமாகும் என 'ஜோஸ்யம்' சொன்னது போல! கண்டார்;.....கண்கொள்ளாக் காட்சியை!.....கறுப்பு சட்டையின் மாட்சியை!...களம் செல்வோம் என்ற உறுதிப் பத்திரத்தில் கையெழுத்திட்ட லட்சம் உள்ளங்களை!.....

பெரியார் தூத்துக்குடியிலே லட்சாதிபதியானார். ஆம்..... லட்சம் தோழர்கள் அவர் வீட்டிய விசிலில் பாய நின்றனர். இதை இயக்கத்தை நசுக்க நினைப்போர் கண்டிருப்பர்..... நஞ்சுக் கொள்கையோர் கேட்டிருப்பர்...காஞ்சி... தூத்துக்குடியாயிற்று!.....தூத்துக்குடி மான்செஸ்டராக மாறும்..மாறித்தான் தீரும். அந்த மகத்தான மாறுதல் பெரியாரின் தலைமையிலே, தளபதிகளின் துணையிலே, கழகத்தின் கட்டுப்பாட்டிலே, நடக்க இருக்கிறது. நடக்கத்தான் போகிறது. இதற்குத்தான் தூத்துக்குடி நடந்தது.

மே 8, 9 வெறும்.....'காலண்டர்' தாள்களல்ல. பித்தம் தெளிந்திடுவீர் எம் ரத்தம் கொதிப்பேறு முன்பே!...என்ற அபாய அறிவிப்பின் கடைசி நாட்கள். என்.....கட்சித் தகராறுகளுக்குக் கூட அவைகளை கடைசி நாட்களாகத் தான் ஆக்கவேண்டும். ஆம்; நாம்!

* * *

முரசொலி.

பேரன்புடையீர்!

முரசொலிக்கென ஒரு தனி அச்சகம் அமைக்கும் ஏற்பாடுகள் கடைபெறுவதால் அந்த ஏற்பாட்டையும், முரசொலி வேலைகளையும், கூட்ட நிகழ்ச்சிகளையும் ஏககாலத்தில் கவனித்துக்கொள்ள முடியாமையால் வார வெளியீடாக இருக்கும் நமது முரசொலியை தற்காலிகமாக இரண்டொரு மாதங்கள் வரையில் மாதமிரு முறையாக (ஒன்றுவிட்ட ஞாயிறுதோறும்) வெளியிட முடிவு கட்டியுள்ளோம்.

சென்னைபோன்ற நகராக இல்லாததால் அச்சிடும் தாள் கிடைக்க தாமதம். அதனால், அலுவல்களைக் கவனிக்க தாமதம் விற்பனையாளர் கட்குக் கிடைக்கத் தாமதம்.

இத்தகைய குறைபாடுகள் தவிர்க்க முடியாதவைகளாக ஆகிவிட்டன.

சொந்த அச்சகம் அமைத்துக்கொண்டால்.....முரசொலி வாரந்தோறும் குறித்தகாள் தவறுமல் வர வகுவாகும். அது வரையில் முரசொலி வளர்ச்சியில் உண்டான இந்தத் தேக்கத்தை பொருட்படுத்தாது என்றும்போல் ஆதரவு தருவீர்களாயின்.....தேக்கம் தேனுற்று வெள்ளமாகக்கூட பெருக்கெடுத்துப் பாயமுடியும்.

எல்லோரும் மாதத்தை வாரமாக்குகிறார்கள்.....நீங்கள் முறைக்கிறீர்களே என்பீர்கள்...

ஆம்....நிலா தேய்கிறது...தேயும் நிலா...வளர்பிறையாக ஆகுமல்லவா?.....

உங்கள் ஆக்கத்தை மட்டும் வாரியிறைத்தால்.....வளர்பிறையென்ன, வானத்து சூரியனுக, வாழும் முரசொலி.

வணக்கம்,

மு. கருணாநிதி.

அடுத்த ஒலி 6—6—48-ல் வெளிவரும்

சர். செல்வம் சங்கடங்களை எதிர்த்து முன்னேறினர்.

இதோ!

விஜயபுரம்
செல்வம் சிற்றுண்டி உணவு நிலையம்

அப்படித்தான்; வெற்றி முழக்கம் செய்கிறது!

விதவிதமான வாயூறும் சிற்றுண்டிகள்!

நிர்வாகி: P. அய்யாசாமி. உரித்தாளர்: A. முத்துகிருட்டினன்.

பள்ளிவிளாகம்
திராவிடர்கழகம் திறக்கப்பட்டது

மூன்றுமைல் தூர உளர்வலம்.

எட்டு ஊர்களில்
நம் கொடியேற்று விழா.

கண்ட விடமெல்லம் கழகக் கொடிகள் காட்சிதர..... 16-5-48 மாலை 5-மணிக்கு திருவாரூர் தோழர் சிங்கம் தலைமையில் ½மைல் நீளமுள்ள ஆதிதிராவிடர் ஊர்வலம் கங்களாஞ்சேரியிலிருந்து புறப்பட்டு எட்டு சேரிகளில் கொடியேற்று விழா நடத்தி, தோழர் V. G. அங்கராசு தலைமையில் 3000 மக்கள் கொண்ட மாபெருங் கூட்டம் பள்ளிவிளாகம் ஆற்றமணலில் நடைபெற்றது. தூத்துக்குடி ஒரு தொடர்கதை என்பது பற்றி தோழர் மு. கருணாநிதியும், பழங்குடி மக்கள் எழுச்சி பற்றி தோழர்கள் ந. வேதையா, R. சிங்கம், வெங்கட்டராமன், பன்னீர்செல்வம், குழந்தைவேல், கோவிந்தசாமி, வாசுதேவன் ஆகியோர் பேச தலைவர் முடிவுரையுடன் இரவு 10½ மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

மறைவு.

பவித்திர மாணிக்கம் திராவிடர் கழக தீவிர தொண்டர் தோழர் சுகவாசகன் அவர்களின் துணைவியார் 16-5-48ல் இயற்கையெய்திஞர்கள். கமது அனுதாபத்தையும், திருவாரூர் திராவிடர் கழக சார்பில் தோழர் V. G. அங்கராசு அவர்கள் அனுதாபத்தையும் தோழருக்கும் அவரைச் சேர்ந்தோருக்கும் உரிமையாக்குகிறோம்.

தஞ்சை மாவட்ட.
திராவிடர் கழக மாநாடு.

பெரியார் அவர்களிடம் உரிமைபெற்றதற கிணங்க ஜில்லா மாநாட்டை திருவாரூரில் கடத்துவதற்கென 23-5-48 ஞாயிறு மாலை 5.மணிக்கு திருவாரூர் திராவிடர் கழகத்தில் செயற்குழு அமைக்கப்படும். இதனையே அழைப்பாக நினைத்து மாவட்டத் தோழர்கள் வருகை தர வேண்டுகிறோம்

V. S. P. யாகூப்,
அமைப்பாளர்.

பிரிவு.

அழியட்டுமே திராவிடத்தின் ஆசிரியர் அன்பர் திரையூர் வீ. நாராயணன் இயற்கை எய்தியது கேட்டு திடுக்கிட்டோம். இளம் மனைவி, பச்சிளங் குழந்தை, அருமை நண்பர், இவர்களைத் தவிக்கவிடும் நிலையில் ஏற்பட்ட தோழரின் மரணம் பரிதாபத்திற்குரியது. அனைவர்க்கும் கமது ஆழ்ந்த அனுதாபம்.

இரத்தக் கண்ணீர்
அடுத்த ஓலியில்!

தேனுக்கு சுவையில்லை என்கிறார்கள். ஏன்?

விஜயபுரம் பீமிலைசில்

ஒருமுறை சிற்றுண்டி அருந்தியதால்தான்!

தமிழரால் நடத்தப்பெறுகிறது. ஆதரியுங்கள்.

ரயில் நிலையத்தங்கள்: சென்னை தாள் தாவில்லை
ஆகவே இவ்வாரம் 8 பக்கங்கள்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: மு. கருணாநிதி, திருவாரூர்.
அச்சிடுபவர்: கருணை. எம். ஜமால். கருணாநிதி [மின்னியக்க] அச்சகம், விஜயபுரம்.